தேதி : 06.12.2018

எம்.சி.ஓ.பி.எண் : 01/2017

மனுதாரர் தரப்பு சாட்சி 1 : ரிகானா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மனுவில் மனுதாரர். கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

கு.வி. (3-ம் எதிர் மனுதாரர் தரப்பில்)

எனக்கு சொந்தஊர் தேன்கனிக்கோட்டை. எனக்கு திருமணமாகி எஸ்.முதுகானப்பள்ளியில் வசிக்கிறேன். என் கணவர் பெயர் இஸ்மாயில். அவர் தற்போது உயிருடன் இருக்கிறார். தற்போதுதான் எனக்கு தெரியும். விபத்தில் இறந்துபோன என் மகன் எனக்கும், இஸ்மாயிலுக்கும் பிறந்தவர் என்றால் சரிதான். வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 15-வருடமாக என்னை பிரிந்து 3-ம் எதிர் மனுதாரர் தனியாக உள்ளார். 3-ம் எதிர் மனுதாரருக்கு வேறு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளார்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3-ம் எதிர் மனுதாரர் இறந்துபோன என் மகனின் தந்தை என்பதால் அவருக்கு இழப்பீடு தொகை கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை-இல்லை.